25th April 1962]

Care milk powder

* 6 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of students affected by use of the CARE milk powder in 1961?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No students were affected by the use of CARE milk powder in 1961. But it is presumed that the member refers to the food poisoning incident in the Athipatti Junior Basic School in January 1962. Forty pupils were affected of whom four died after consuming rice with curd made out of CARE milk powder.

SRI S. MADHAVAN : இந்தப் பால் பவுடரை யார் சப்ளை செய்தது ? எந்த நாட்டிலிருந்து சப்ளை செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பால் பவுடர் அமெரிக்காவிலிருந்து வந்தது. இந்தப் பால் பவுடரில் ஒன்றும் குற்றம் இல்லை.

SRI V. S. S. MANI : இந்தச் சம்பவம் நடந்ததற்கு யார் பொறுப்பு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பால் பவுடரிலே தண்ணீர் விட்டு கலக்கி தயிராக்கி பிறகு மோர் ஆக்குகிறார்கள். இதைச் செய்வதும் பள்ளிக்குழந்தைகள்தான். அப்படிச்செய்யும்போது ஒரு குழந்தைக்கு கையில் புண் இருந்தது. இந்தப் புண்தான் இந்த விஷத்திற்குக் காரணம் என்று பரிசீலனைக்குப் பிறகு தெரியவந்தது. இந்தப் புண்தான் இதற்குப் பொறுப்பு.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது தொடர்ந்து இந்த பால் பவுடர் உபயோகிக்கப்படுகின்றதா ? இப்பொழுது உள்ள நிலைமை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது பால் பவுடர் உபயோகிக்கப்படுகின்றது. இதற்கு முன்பு குளிர்ந்த தண்ணீரில் அது கறைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அது வெந்நீரில் கலக்கப்படுகிறது. முன்பு செய்ததைப் போல் அதை மோர் ஆக்காமல், இப்பொழுது அது பாலாகவே உபயோகிக்கப்படுகிறது.

PULAVAR K. GOVINDAN : ஸார், அமெரிக்க நாட்டு பால் பவுடர் நம் கடைவீதிகளில் விற்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு இருந்ததே அது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றித் தகவல் கொடுத்தால், மேலும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம். அது சம்பந்தமாக ஒரு சட்டம்கூட நாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்பது அங்கத்தினருக்குத் தெரிந்திருக்கும்.

MR. SPEAKER : Questions are over.